(ஆ) ஆம் எனில் எப்பொழுது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு எம். விஜயசாரதி:

அ) இராமநாதபுரம் மாவட்டம் பேரையூரில் ஆதிதிராவிடர் நலத்துறையால் மாணவர்கள் தங்கும் விடுதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இது குறித்து மாவட்ட நல அலுவலரிடம் தொடர்பு கொண்டு தேவையையும் நிதி நிலையையும் முன்னிட்டு தக்க தருணத்தில் பரிசீலிக்கப்படும்.

திரு பி. மெக்கையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். அங்கே ஏழை எளிய மக்கள் காலம்காலமாக வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, அங்கே இருக்கும் மக்களுக்கு அந்த இராமநாதபுரம் மாவட்டத்தில் பேரையூரில் புதிதாக இந்த ஆண்டிலேயே ஒரு விடுதி துவக்கி அந்த அரிசன மாணவர்களைக் காப்பாற்ற இந்த அரசு முன் வருமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு துவக்குவதற்கு இயலாது. மாவட்ட ஆதித்திராவிடர் நல அலுவலரிடமிருந்து அறிக்கை பெற்றபின்தான் அந்த வேலை துவங்கப்படும்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் இணைப்பை பார்க்க]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன,

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

2. தகவல் கோரல்.

அ. கால் பந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற மோகன் பேகன் அணிக்குப் பாராட்டு

திரு. மி. வின்சென்ட்: தலைவர் அவர்களே, அகில இந்திய கால்பந்தாட்டப் போட்டி, ஒரு மாதகாலமாக சென்னையில் நடந்து நேற்றையதினம் முடிந்து, மோகன் பேகன் அணி வெற்றி பெற்று இருக்கிறது அதற்கு தமிழக மக்களின் பல்லாயிரக் கணக்கானவர்களின் வாழ்த்துக்களோடு அந்த அணிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெடரேஷன் கப் பரிசு வழங்கி இருக்கிறார்கள் அந்த அணி போட்ட இரண்டு கோல்களில் ஒரு கோலை அந்த அணியைச் சேர்ந்த உலகநாதன் போட்டு

தமிழகத்திற்கு பெருமை தேடித் தரும் வகையில் அந்த சாதனையைப் புரிந்துள்ளார். தமிழகம் எங்கும் நல்ல விளையாட்டு வீரர்கள் உருவாக்கப்பட வேண்டும் என்கிற வகையில். அந்த பெடரேஷன் கோப்பையை வென்ற அந்தக் குழுவின் தலைவரை சட்டமன்ற பேரவைத் தலைவர் அழைத்து சட்டமன்ற உறுப்பினர்களுடன் சேர்ந்து, விருந்து அளிக்க மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நல்ல கருத்து, ஆலோசிக்கலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் சொல்கிறேன்.

[முற்பகல் 9.50]

ஆ. வேளாண்மைத் துறை தொழில் நுட்ப அலுவலர்கள்

உண்ணாவிரதம்

திரு எம். தங்கவேல்ராஜ்: தலைவரவர்களே, தற்போது தமிழ்நாடு வேளாண்மைத் துறை தொழில் நுட்ப அலுவலர்கள் சில கோரிக்கைகளை வைத்து, அதற்காக 2.5.81 முதல் உண்ணாவிரதம் இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பற்றி தனியாக கவன ஈர்ப்புத் தீர்மானமாகவோ அல்லது ஒத்தி வைப்புத் தீர்மானமாகவோ கொண்டு வாருங்கள்.

திரு. சே. அழகர்சாமி: தலைவரவர்களே, வேளாண்மை தொழில் நுட்ப அலுவலர்கள் 5 நாட்களுக்கு மேலாக சாகும்வரை உண்ணாவிரதம் என்ற போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அது பற்றி......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்டம் குளச்சலில் போலீஸ் நிலையத்தில் ஒருவர் செத்து விட்டது பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது. நாம் தினந்தோறும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பல ஒத்தி வைப்புத் தீர்மானங்களையும், கவன ஈர்ப்புத் தீர்மானங்களையும் கொடுத்திருக்கிறார்கள். அவைகளுக்கு முதலில் பதில் வரவேண்டும். வந்தபின்னால் அதிகமான தீர்மானங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமானால் அலுவல் ஆய்வுக்குழுவில் முடிவு செய்ய வேண்டும். ஆகவே, இன்றைக்கு பகல் 12 மணிக்கு அலுவல் ஆய்வுக் குழுவை கூட்ட இருக்கிறேன். அதில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் தங்களுடைய கருத்துக்களைச் சொன்னால் அதன்படி நான் அவையை நடத்திச் செல்ல தயாராக இருக்கிறேன்.

திரு. சே. அழகர்சாமி: தலைவரவர்களே, ஆசிரியர்கள் மறியல் போராட்டம் நடத்தி, ஏராளமானவர்கள் உள்ளே இருக்கிறார்கள். அதுபற்றி....